பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி21 திங்கட்கிழமை 07.10.2024 கதிர் 334

## யாழ், மட்டு மாவட்டங்களில்
# இளைஞர்கள், புது முகங்களுடன் களம் இறங்குகின்றது தமிழ் அரசு
## துடிப்பான பெண் வேட்பாளர்களுக்கும் வாய்ப்பு



யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இளைஞர்கள்,பெண்கள்மற்றும் புது முகங்களுடன் களமிறங்குகிறது தமிழ் அரசுக் கட்சி.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!



தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் நியமனக் குழு நேற்று இரண்டாவது நாளாகவும் வவுனியாவில் கூடியது. யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் வேட்பாளர்கள் இறுதிசெய்யப்பட்டனர்.

இந்த நியமனக் குழுவில் 11 பேர் இருந்தாலும் அவர்களில் 8 பேர் சுமந்திரனுக்கு ஆதரவானவர்கள் என்று ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தேன். சிறீதரனுக்கு ஆதரவாக தலைவர் மாவையும் திருகோணமலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனுமே இருக்கக்கூடியவர்கள் என்றும் அவர்களும் சர்ந்தர்ப்பத்திற்கு ஏற்பச் சாயக்கூடியவர்கள்தான் என்பதால் சிறீதரன் இந்தக் கூட்டத்தில் அனேகமாகத் தனித்தவில்தான் ☞2

## சிறி ரெலோ வன்னியில் தனித்துப் போட்டி

வன்னித் தேர்தல் தொகுதியில் சிறி ரெலோகட்சி தனித்துப்போட்டியிடவுள்ளதாக அக் கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். அத்தகையதொரு ☞8

### தமிழ் அரசுக் கட்சி
## திருமலையில் சேர்ந்து போட்டி அம்பாறையில் தனித்தே போட்டி

கிழக்குமாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் வீட்-டுச் சின்னத்திலும் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு இணங்கியுள்ளன. ஆனால் அம்பாறை மாவட்டத்தில் இந்த இணக்கம் ஏற்படவில்லை. அதனால் தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டியிடவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியில் உள்ள சிலகட்சிகளும் இணைந்துபோட்டியிடவுள்ளன. மாவட்டத்தில் மொத்தமுள்ள 7 வேட்பாளர் இடங்களில் 4 தமிழ் அரசுக் கட்சிக்கும் 3 மற்றைய கட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சிறிதரன், குகதாசன் ஆகியோர் சனிக்கிழமை மாலை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் நேரில் சந்தித்து உரையாடிய பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட்டது. திருகோணமலை ☞2



### நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட
## சார்ள்ஸ் நிர்மலநாதன் விண்ணப்பிக்கவில்லை

வன்னி மாவட்ட முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட இதுவரை விண்ணப்பிக்கவில்லை என்று கட்சியின் தேர்தல் நியமனக் குழு உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன் தெரிவித்தார்.

"எமது கட்சியிடம் அவர் விண்ணப்பிக்கவில்லை" என்றார் சுமந்திரன். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் நியமனக் குழுக் ☞8

## தேசியப் போலிகளின் வேட்பாளர்கள் தெரிவு
### எல்லாம் பழைய முகங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் தேசியப் போலிகள் என்று முத்திரை குத்தப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மற்றும் யாழ். மாவட்ட வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ☞8

## தனித்தும் கூட்டாகவுமே மக்கள் காங்கிரஸ் போட்டி



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 2024 பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும். சில மாவட்டங்களில் ☞8

## வடக்கு - கிழக்கில் ஈரோஸ் தேர்தலில் தனித்து போட்டி
### மலையகத்திலும் இம்முறை களத்தில்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் கட்சி வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் தனித்து போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் செயற்குழு கூட்டம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது. அது குறித்து கட்சியின் செயலாளர் இராச நாயகம் தெரிவித்த தாவது:

தென்பகுதி மக்கள் தமக்குரிய தலைமையினை தெரிவுசெய்துள்ளனர். கடந்த காலங்களில் தமிழ்த்தேசியம் என்ற நிலைமையினை தக்கவைத்து தமிழ் ☞8

## தமிழ் மக்கள் பொதுச் சபை தேர்தலில் எதுவும் செய்யாது
### சுய முடிவெடுக்குமாறு உறுப்பினர்களுக்கு அறிவிப்பு

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொ-துச் சபை எதுவும் செய்யப்போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சபையில் உள்ள அமைப்புக்கள் தங்கள் அமைப்பு சார்ந்து பொருத்தமான தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பொதுச்சபை ஈழத் தமிழ் மக்களின் விடிவை நோக்கிய பயணத்திற்கும் மக்களை ஒன்று திரட்டி ஒருங்கிணைக்கும் தொலைநோக்குடன் உருவாகியது. அதுதன்னைப் போதியளவில் ☞8

## ரணிலின் பொருளாதார திட்டங்களை நிறுத்தினால் இலங்கைக்கு பேரழிவு
### இதை இப்போது தேசிய மக்கள் சக்தி உணர்ந்துள்ளது என்கிறார் நிமல் லன்ஸா

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்களை நிறுத்தினால் பேரழிவுதான் என்பதை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தற்போது உணர்ந்துள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தெரிவித்தார். அதனால்தான் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் தொடர்பில் ☞8

## ஈபிடிபியின் வன்னி மாவட்ட வேட்பாளர் விவரம் அறிவிப்பு

ஈபிடிபி கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் வவுனியாவை பிரதிநிதித்துவப்படுத்தி கிறிஸ்தோபர் டினேஸ் றொசின்றன், மதுர பிரபோத் ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தி அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ், ☞8

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலால்
## பாதிக்கப்பட்டோருக்கு நீதி பெற்றுத் தரப்படும்
### விசாரணை துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி உறுதிமொழி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். இலங்கையில் மீண்டும் இவ்வாறானதொரு அவலம் ஏற்படாதிருப்பது உறுதி செய்யப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க உறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு இடம்பெற்ற முக்கிய தேவாலயங்களில் ஒன்றான நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி, குண்டுவெடிப்பில் காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு இருந்த ஒருவர் ஜனாதிபதியிடம் ☞2

## இனி இது .....

என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

நேற்றைய கூட்டத்தில் அது அப்பட்டமாகத் தெரிந்தது. கூட்டத்திற்குள் ஆதரவு ஏதுமற்று சிறீதரன் அமைதியாக அமர்ந்திருக்கவேண்டியிருந்தது. அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. தொடக்கத்திலேயே, கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உங்களுக்கு இடம்தந்ததே பெரியவிடயம் அதனால் இனி எதுவும் தலையிடாமல்அமைதியாகஇருக்கவேண்டும் என்றுசுமந்திரன்எச்சரித்துவிட்டார். கூட்டத்தில் அதை எதிர்த்து சிறீதரனை ஆதரிக்க எவரும் இருக்கவில்லை.

தனது தரப்பிலிருந்து சம்மந்தி சசிகலா ரவிராஜ், புலம்பெயர் வர்த்தகரான அகிலன், கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவர் சட்டத்தரணி தவராசாவுக்குக் கொடுக்க வேண்டும்என்றுவாதிட்டார். அதற்கும்இவர்கள் மூவருக்கும்கொடுப்பதாகஇருந்தால்பட்டியலில் இருந்து என்னை விடுவித்து விடுங்கள் என்று சுமந்திரன் கறாராக நின்றுகொண்டார். அவர்களாக நானா என்பதைக் கட்சியே தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று அவர் நின்ற பிடிவாதத்தைப் பார்த்து மாவையரும் அமைதியாகிவிட்டார்.

அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களில் சயந்தன், சுகிர்தன், பிரகாஸ் என்று எல்லோரும் சுமந்திரனின் தீவிர ஆதரவாளர்கள் என்று அறியப்பட்டவர்கள். ஆர்னோல்ட் கடந்த தடவை தலைவர் மாவையரைவளைத்துப்பிடித்துசுமந்திரனுக்கு எதிராக நாடாளுமன்றத் தேர்தலில் வேலை செய்தவர். ஆனாலும் இந்தத் தடவை சுமந்திரனேதான் அவரையும் விண்ணப்பம் கொடுக்கச் சொல்லி நியமனக் குழுவிலும் ஆதரவளித்திருக்கிறார். பெண்கள் தெரிவில் கிருஸ்ணவேணியும் சுமந்திரனுக்கு நெருக்கமானவர். மற்றையவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர். இதில் தந்தை செல்வாவின் பேரனான இளங்கோவன் மட்டுமே கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையின் பரிந்துரையில் வந்தவர். அரச சார்பற்ற அமைப்புக்களின் மத்தியில் நன்கு அறியப்பட்டவரான அவரும் மாவையர் அளவிற்குசுமந்திரனுடனும்நெருக்கமானவர். அதுமட்டுமல்லாமல் கிளிநொச்சியில் மக்கள் மத்தியில்நீண்டகாலமாகசோயாநிறுவனத்தின் ஊடாகப் பணியாற்றியவர். ஆக மொத்தத்தில் சிறீதரனைத் தவிர மற்றைய எட்டுப்பேரும் ஓரணியாகத் தேர்தல் களத்தைக் களைகட்ட வைப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

தனித்துப் போய்விட்ட சிறீதரன் அந்தக் கோபத்தினாலோ என்னவோ கூட்டம் முடிந்தபோது நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொள்ளாமலேயே புறக்கணித்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றுதெரிவிக்கப்பட்டது. இந்தமுறைதேர்தல் களம் அவருக்கு மிகச் சவாலானதாகவே அமையும். வெற்றிக்கு அவர் தலையால் கிடங்கு கிண்டவேண்டி இருக்கும். கட்சிக்குச் செய்த துரோகத்திற்கு அவர் இப்போது அனுபவிக்கிறார் என்று நினைக்கின்றேன்.

இதற்கிடையில், வேட்பாளர் தெரிவில் தனக்கு இடம் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிந்துகொண்ட சட்டத்தரணி தவராசா கட்சியிலிருந்து தான் விலகுகிறார் என்று அறிவித்திருக்கிறார். கட்சிக்குள் சுமந்திரனுக்கு எதிராக நீண்ட காலமாக நின்ற தூண் அவர். அவரது வெளியேற்றம் சுமந்திரனின் ஆட்சியைக் கட்சிக்குள் மேலும் பலப்படுத்தும் என்பது வெள்ளிடைமலை. ஆனால், தவராசாவின் விலகலை கட்சித் தலைவர் மாவை ஏற்றுக்கொள்வாரா என்பது தெரியாது. அவர் அன்பொழுகப்பேசி அவரைத் தொடர்ந்தும் கட்சியில் தக்கவைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தனதுவிலகல்தொடர்பாகதவராசாவிடுத்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:

தமிழ் அரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தின் ஊடாக கட்சியின் முழுச் செயற்பாடுகளையும் நிர்வகித்து வரும் சுமந்திரன், கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது.

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிவரலாற்றில் பல தியாகங்களாலும், வீரம் செறிந்த பல போராட்ட சரித்திரங்களாலும் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியத் தலைவரின் உயர்ந்த சிந்தனையின் அடிப்படையில் வீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது.

அந்த வீட்டில் இருந்த அனைவரையும் வெளியேற்றி, தமிழ் அரசுக் கட்சிகளின் தூண்களையும் வெளியேற்றி, மேலும் தென்னிலங்கையின் முகவர் அரசியல் செய்வதற்கு முற்படுகின்ற சுமந்திரனின் தான்தோன்றித்தனமான செயற்பாடு ஒட்டுமொத்த தமிழரசுக் கட்சியையும் அழிக்கும். எனவே, என்னை நேசிக்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு நான் அறியத் தருவது என்னவென்றால், வீரத்தின் பால் வழிநடத்தப்பட்ட கட்சி இன்று சோர்விழந்து சோரம் போகின்ற ஓர் ஆபத்தான நிலையில் இருக்கின்றபடியால் அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் நான் விலகுகின்றேன்.

தமிழ்த்தேசியவிரோதிகளின்கைகளுக்குள் சிக்குண்டதமிழ்அரசுக்கட்சியில்தொடர்ந்தும் பயணிப்பது பொருத்தமற்றது என்பதால் இந்த முடிவு எட்டப்படுகின்றது.

தனிநபர்களின் தன்னிச்சையான போக்குக்குள் சிக்குண்டு தமிழ் அசுக் கட்சி சின்னாபின்னமாகி இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சியில் பயணிக்க முடியாது. தேசியத்தைக் கண்முன்னாலேகுழிதோண்டிப்புதைக்கின்ற செயற்பாடுகளுக்குத் துணை போகின்ற வரலாற்றுத் துரோகத்தை நான் செய்யத் தயார் இல்லை என்பதால் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து விலகிக்கொள்கின்றேன்.

தமிழ்த் தேசியத்தை உரிய பலத்துடன் நிலைநாட்ட என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்குண்டான வழிவகைகள் குறித்து எதிர்காலத்தில் சிந்திப்பதற்கு முடிவெடுத்துள்ளேன் - - என்றுள்ளது

......................

தமிழ் அரசுக் கட்சியின் நிலை இதுவென்றால் மறுபுறத்தில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்குள் யாழ்ப்பாண வேட்பாளர்கள் தெரிவினால் பெரும் குழப்பம். ரெலோவின் வேட்பாளர் தொிவையொட்டியே குழப்பம். ரெலோவின் யாழ். மாவட்டக் கிளையினர் தமது கட்சிக்காக தேர்தலில் பணியாற்றப்போவதில்லைஎன்றுபோர்க்கொடி தூக்கியுள்ளனர். அதற்குக் காரணம் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மைச் செயற்பாட்டாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமானவிந்தனைகட்சித்தலைமை வேண்டும் என்றே பழிவாங்கியிருப்பதுதான் என்று யாழ். மாவட்டக் கிளையினர் தெரிவித்தனர். இந்தத் தேர்தலில் ''நாங்கள் யாரும் ரெலோவின் வேட்பாளருக்காக வேலை செய்யப்போவதேயில்லை. வேண்டுமென்றால் சிவாஜி அண்ணைக்காக அல்லது ஜனார்த்தனனுக்காக வேலை செய்வோமே தவிர கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளராகப் போடப்பட்டிருக்கும் சுரேன் குருசாமிக்கு எதிராக ஒருபோதும் வாக்குக் கேட்கமாட்டோம். பெரும் ஆள்மாறாட்ட மோசடி செய்து ஒரு தமிழ் மகனின் கொழும்பு வீட்டையே ஆட்டையைப் போட்டார் என்று நீதிமன்றில் வழக்கை எதிர்கொண்டிருக்கும் ஒருவருக்கு வாக்குப் போடுங்கள் என்று நாங்கள் எப்படி மக்களிடம் சென்று கேட்கமுடியும்?'' என்று அழைப்பெடுத்துச் சீறினார்கள் ரெலோவின் உறுப்பினர்கள்.

என்னதான் பிரச்சினை என்று கொஞ்சம் துருவினேன். ஒக்டோபர் 2ஆம் திகதி திருகோணமலையில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் விந்தனுக்கு யாழ். மாவட்டத்தில் வேட்பாளராக இடம்கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. கட்சியின் மாவட்டக் கிளைப் பொறுப்பாளர்கள் துணைப் பொறுப்பாளர்கள் என்று அனைவரையும் அழைத்து நடத்தப்பட்ட கட்சியின் பெரும் கூட்டம் அது என்கிறார்கள். கிட்டத்தட்ட கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை ஒத்தது. அந்தக் கூட்டத்தில் வேட்பாளர்கள் குறித்துப் பேசப்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் சுரேனுக்கு இடமளிக்கவேண்டாம் என்று எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்சியின் நீண்ட காலச் செயற்பாட்டாளர்களுக்கோ அல்லது வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவராக இருந்தவரான நிரோஸுக்கோ அந்த வாய்ப்பை வழங்கச் சொல்லி விந்தனேகூட அந்தக் கூ-ட்டத்தில் கூறியிருக்கின்றார். அப்போது இல்லை, அந்த வாய்ப்பை விந்தனுக்குக் கொடுப்பதுதான் சரி என்று அவ்வளவு பேருக்கும் முன்னால் கட்சித் தலைவர்கள் சொல்லியுள்ளார்கள். ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர்கள் தெரிவில் விந்தனுக்கு ஒரு இடம் வாங்கித் தரப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்கள்.

நான் இந்தப் பத்தியில் ஏற்கனவேயும் ஒரு தடவைவிந்தனுக்குவாயில்தான்ஏழரைச்சனி என்று சுட்டிக்காட்டியிருக்கின்றேன். விந்தன் நேர்மை, நியாயம், நீதி என்றுகொண்டு கட்சித் தலைவர்களையும் அவர்கள் செய்யும் அராஜகங்களையும்கட்சிக்குள்சகட்டுமேனிக்கு கேள்வி கேட்கத் தயங்குவதில்லை. அது கட்சித் தலைவர் செல்வமாக இருந்தாலும் செயலாளர் ஜனாவாக இருந்தாலும் பேச்சாளர் சுரேனாக இருந்தாலும் விந்தன் செக்குச் சிவலிங்கம் எல்லாம் பார்ப்பதில்லை. கூட்டங்களில் விந்தன் சொல்வது சரி என்று மற்ற உறுப்பினர்களுக்கும் படுவதால் அவர்களும் விந்தனுக்கு ஆதரவாகவே இருப்பார்கள். அதனால் அவ்வப்போதைக்கு விந்தனைச்சமாளித்துக்கொண்டுநகர்வதுதான் கட்சித் தலைமையின் வழமை. ஆனால், பொறுத்திருந்து கழுத்தறுத்துவிடுவார்கள். அதுதான் யாழ்.மாவட்ட வேட்பாளர் தெரிவிலும் நடந்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளரான அரியநேத்திரனுக்கு ஆதரவாக ரெலோ வேலைசெய்யவில்லை, ரணிலுக்கு ஆதரவாக அவரிடம் வாங்கிய காசுக்காகவே அப்படி நடந்துகொண்டார்கள் ரெலோ தலைவர்கள் என்பதையும் விந்தன் கட்சிக்குள் விமர்சிக்கத் தவறியதில்லை. இவையெல்லாவற்றையும் மனதில்கொண்டு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் ரெலோவிற்கு இரண்டு இடங்கள் கொடுக்கப்பட்டபோதும் அதற்கு சுரேன் குருசாமியின் பெயரை மட்டும் பரிந்துரைத்துவிட்டு அமைதியாகிவிட்டார்கள் ரெலோவின் தலைவர்கள். அந்த இரண்டாவது இடத்திற்கு விந்தனின் பெயரை அவர்கள் பரிந்துரைக்கவில்லை. தப்பித் தவறிக்கூட அங்கு விந்தனின் பெயர் வந்துவிடாமல் பார்த்துக்கொண்டார்கள். பழிவாங்கிவிட்டார்கள். இதனால் ரெலோவிற்கு வரவேண்டிய அந்த இரண்டாவது இடம் இப்போது பொது இடம்போன்றாகிவிட்டது. அந்த இடத்திற்கு வேறு எந்தக் கட்சியாவது வேட்பாளரைப் போடலாம் அல்லது ஒரு பெண் கிடைத்தால் வேட்பாளராகப் போடலாம் என்கிற நிலைதான் இருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் அதுவும் மாநகர சபைக்குள் விந்தன்தான் கட்சியின் முதன்மைச் செயற்பட்டாளர். மாகாண சபை உறுப்பினராகவும் இருந்தவர். அவரது சொந்த இடமானநெடுந்தீவிலும்அவருக்குகணிசமான செல்வாக்கு இருக்கிறது. அப்படியிருந்தும் அவர் கட்சித் தலைமையால் பழிவாங்கப்பட்டதால் ஆத்திரமடைந்திருக்கும் யாழ். மாவட்ட கட்சி உறுப்பினர்கள்தான் இப்போது போர்க் கொடி தூக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் குழப்பத்தில் சிறீகாந்தா தலைமையிலான தமிழ் தேசியக் கட்சிக்கு இன்னும் கொஞ்சம் உறுப்பினர்கள், செயற்படக்கூடியவர்கள் வாக்குகள் பெறக்கூடியவர்கள் கிடைப்பார்கள் போலத்தான் இருக்கின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இளைஞர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் முழுமையாக இறுதி செய்யப்பட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலும் முக்கியமான உறுப்பினர்கள் இறுதி செய்யப்பட்டார்கள்.

இந்த விவரங்கள் குறித்து செய்தியாளர்களுடன் பேசிய கட்சியின் தேர்தல் நியமனக் குழு உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுவின் கூட்டம் காலை முதல் மாலை வரை இரண்டாவது நாளாக நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மாவட்டங்களின் வேட்பாளர்கள் நியமனம் தொடர்பாகவும் ஆராய்ந்து இறுதி முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

அதன்படி யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரனும் நானும் போட்டியிடுவதுடன், ஏனைய 7 பேரும் புதியவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தந்தை செல்வாவின் பேரனான இளங்கோவன், சட்டத்தரணி கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவேல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் ஏனைய வேட்பாளர்களாவர்.

இவர்களில் இருவர் பெண் வேட்பாளர்கள். மிகவும் துடிப்பான இரு பெண்களையும் இம்முறை நிறுத்தியுள்ளோம். பெண் வேட்பாளர்கள் தேவை என நாம் ஊடகங்களில் தெரிவித்ததை பார்த்து இருவர் விண்ணப்பித்தனர். அவர்கள் இருவருக்குமே வாய்ப்பைக் கொடுத்துள்ளோம்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேட்பாளர் பட்டியல் இறுதிசெய்யப்பட்டுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், எமது கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன், மட்டு மாநகர முன்னாள் மேயர் தி.சரவணபவன், வைத்தியர் சிறிநாத் உள்ளிட்ட நால்வர் இறுதி செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் மாவட்ட கிளையுடன் பேசி இறுதி செய்யப்படுவர்.

வன்னி, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட பட்டியல்கள் இறுதி செய்யப்படவில்லை. வன்னித் தேர்தல் தொகுதியில்மூன்றுமாவட்டங்கள்இருப்பதுடன் பல்வேறு பிரிவினரும் உள்ளனர். அது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் புதன்கிழைமை அது இறுதி செய்யப்படும்.

திருகோணமலையில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து எமது வீட்டுசின்னத்தில் போட்டியிடுகின்றோம். அவர்களுக்கு 3 ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் புதன் கிழமை இறுதி செய்யபடும்.

அம்பாறை மாவட்டத்தில் எமது மாவட்ட கிளை கலந்துரையாடி எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக எமது சின்னத்தில் நாம் தனித்தே போட்டியிடுகின்றோம். எமது மாவட்ட கிளை வேட்பாளர்களை தற்போது தெரிவு செய்து வருகின்றோம். புதன்கிழமை அந்தப் பட்டியலும் இறுதி செய்யப்படும்.

இம்முறை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கு ஏற்ப புது முகங்களுடன், இளையவர்களுடன் எமது கட்சி தேர்தலில் களமிறங்கியுள்ளது எனத் தெரிவித்தார். (100)

## திருமலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தினையே தக்க வைத்துக்கொள்ளும் வகையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற அடிப்படையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் ஆண்டகை, தென்கயிலை ஆதீனத்தின் ஆதரவுடன் இதற்கான முயற்சிகளை எடுத்திருந்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி திருகோணமலை மாவட்டத்தில் தமக்கு 5 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்று என்று நிபந்தனை விதித்திருந்தது. இறுப்பினும் பேச்சுக்களின் பின்னர் 4 இடங்களுக்கு ஒத்துக்கொண்டது.

ஆனால் அம்பாறையில் தமிழ் அரசுக் கட்சியின் பெயர் மற்றும் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடமுடியாது என்று மற்றைய தமிழ்க் கட்சிகள் பிடிவாதம் பிடித்ததால் அங்கு தனித்தே போட்டியிடுவது என்று தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் ஆண்டகையின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டபோது, உரையாடல்கள் ஊடாக அந்தப் பிரச்சினையையும் முடிவுக்கு கொண்டுவருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பாதிக்கப்பட்டோருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது வேதனையை வெளிப்படுத்தியதுடன், தாக்குதல் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அந்த இடத்திற்கு வருகிறார் என்று தெரிந்தால்தான் அங்கு வந்திருக்கவேமாட்டார் எனத் தெரிவித்த அவர், இந்த நாட்டில் அரசியல்வாதிகள் மிகவும் விரும்பத்தகாதவர்கள் எனவும் ஜனாதிபதியின் முகத்திற்கு நேரே தெரிவித்தார்.

இந்த நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் சட்டமொன்றை தயாரிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

பதிலளித்த ஜனாதிபதி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு, நாட்டில் மீண்டும் இவ்வாறானதொரு அவலம் ஏற்படாத வகையில் பின்னணியை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என்று அவருக்கு உறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவாகத் தேவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்திற்குச் சென்று மலர் தூவி அஞ்சலியும் செலுத்தினார் ஜனாதிபதி.

அதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களின்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை போன்ற அயல் நாடுகள் இந்தியாவுக்கு மிகவும் முக்கியம்

## அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



இலங்கை போன்ற அண்டை நாடுகள் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானவை என்றும் இந்தியாவில் இலங்கைபற்றியமிகுந்தநல்லெண்ணம் இருப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடனான சந்திப்பில் தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தனது நெருங்கிய கடல்சார் அண்டை நாடாகவும்நெருக்கடியில்கைகொடுக்கும் நட்பு நாடாகவும் இலங்கைக்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதே தனது விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பிற்பகல் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போதே இந்தியவெளிவிவகார அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக் கூட்டணி வெற்றி பெற்றதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துக்களை இதன்போது இந்தியவெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே இரு நாடுகளுக்கு இடையேயான நெருங்கிய இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் இருக்கும் என அவர் இதன்போது பிரதமரிடம் உறுதியளித்தார்.

பல வருடங்களாக இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நன்றி தெரிவித்ததுடன் இலங்கையின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக இந்தியாவின் ஆதரவின் அவசியத்தையும் வலியுறுத்தினார். அத்துடன் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையின் ஒரு நிலைமாற்றக் காலத்தை கடந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

டிஜிற்றல் மயமாக்கல் முயற்சிகள் குறித்து வலியுறுத்திய பிற்பாடு கிராமப்புறங்களுக்கு டிஜிற்றல் மயமாக்கலை விரிவுபடுத்துவதில் இந்தியாவின் பரந்த அனுபவத்திலிருந்து இலங்கை பயனடையலாம் எனத் தெரிவித்த பிரதமர், விரயம் ஊழல் மற்றும் பரிவர்த்தனைகளில் முறைகேடுகளைக் குறைப்பதற்கும் உற்பத்தியாளர்கள் கொள்வனவாளர் மற்றும் விவசாய சமூகத்திற்கு மகத்தான அனுகூலங்களைக் கொண்டு வருவதற்கும் டிஜிற்றல் மயமாக்கல் முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார்.


இலங்கையுடன் டிஜிற்றல் தளம் தொடர்பான அறிவை இந்தியா தொடர்ந்து பகிர்ந்து கொள்ளும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்ததுடன் கதி சக்தி (நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை அரச ஊழியர்களுக்கு அபிவிருத்தித் திட்ட நடைமுறைப்படுத்தலை விரைவாகக் கண்காணிப்பதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சுங்கம்இறைவரிதபால்திணைக்களம் உள்ளிட்ட பல துறைகளுக்கான திறன் விருத்தித் திட்டங்களை இந்தியா விரிவுபடுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைபோன்றஅண்டைநாடுகள் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானவை என்றும் இந்தியாவில் இலங்கை பற்றிய மிகுந்த நல்லெண்ணம் இருப்பதாகவும் அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார். தனது நெருங்கிய கடல்சார் அண்டை நாடாகவும் நெருக்கடியில் கைகொடுக்கும் நட்பு நாடாகவும் இலங்கைக்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதே தனது விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும் அவர் கூறினார். இதன்போது வெள;வேறு துறைகளில் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

(05)

# ஜெய்சங்கரின் சிங்கள நூலின் பிரதியை வழங்கினார் மிலிந்த



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரால் எழுதப்பட்ட ‘இந்திய வழி: நிலையற்ற உலகுக்கான உத்திகள்’ எனும் நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் ‘பாத்பைன்டர் பவுண்டேஷனின்’ ஸ்தாபகரும், இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகருமான மிலிந்த மொரகொடவால் நாட்டுக்கு வருகைதந்திருந்த அமைச்சர் ஜெய்சங்கரிடம் கையளிக்கப்பட்டது.

குறுகிய உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெள்ளிக்கிழமை நாட்டுக்கு வருகைதந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதனையடுத்து கொழும்பில் அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்த பாத்பைன்டர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் மிலிந்த மொரகொட, ஜெய்சங்கரால் எழுதப்பட்ட ‘இந்திய வழி: நிலையற்ற உலகுக்கான உத்திகள்’எனும் நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூலை அவரிடம் கையளித்தார். இதன்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாத்பைன்டர் பவுண்டேஷனின் தலைவர் பேர்னாட் குணதிலக்க, தொடர்பாடல் பிரிவு ஆலோசகர் காமினி சரத் கொடகந்த ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட நூலின் சிங்கள மொழிபெயர்ப்பானது பாத்பைன்டர் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் அஜித் பெரகும் ஜயசிங்க என்பவரால் செய்யப்பட்டது. உலகளாவிய கொள்கைசார் உரையாடல்களில் இலங்கையர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதும், இந்தியாவின் இராஜதந்திர நோக்குநிலைகள் குறித்த ஆழமான புரிதலை ஊக்குவிப்பதுமே இதன் பிரதான நோக்கங்களாகும்.

கலாநிதி எஸ்.ஜெய்சங்கரால் எழுதப்பட்ட ‘இந்தியவழி’ எனும் நூலானது 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலக நிதி நெருக்கடி மற்றும் 2020 இல் ஏற்பட்ட கொவிட் – 19 பெருந்தொற்றுப்பரவல் ஆகியவற்றால் தூண்டுதலளிக்கப்பட்ட பூகோள அரசியல் மாற்றங்கள் தொடர்பில் மிக ஆழமாக ஆராய்கிறது. அதுமாத்திரமன்றி இத்தகைய நிலையற்றதும், போட்டித்தன்மை மிகுந்ததுமான உலகில் அசைக்கமுடியாத ஒரு பெரும் சக்தியாக இந்தியா எவ்வாறு எழுச்சியடைந்துவருகிறது என்பது பற்றியும் இந்நாள் அமைச்சரும், முன்னைய இராஜதந்திரியுமான ஜெய்சங்கர் இந்நூலில் நுணுக்கமாக விபரித்திருக்கிறார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்நூலை சிங்களத்தில் மொழிபெயர்ந்து, விநியோகிப்பதற்கான உரிமத்தைப்பெற்ற பாத்பைன்டர் பவுண்டேஷன், அம்மொழிபெயர்ப்பு நூல் முக்கிய கல்வி நிலையங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பாதெனிய – அநுராதபுரம் வீதி விபத்தில் 2 பேர் காயம்





பாதெனிய - அநுராதபுரம் வீதியில் தலாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.



தனியார் பஸ் ஒன்று வீதியில் பயணித்த மற்றுமொரு பஸ்ஸை கடந்து முன்னோக்கிச்செல்ல முயன்ற போது லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, இருவர்படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொடரும் பாரபட்சம்

இந்த நாட்டில் சகல மக்களும் சமமாக நடத்தப்படுவார்கள் என்று ஜேவிபியின் தேசிய மக்கள் சக்தியினரும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவும் தொண்டை கிழியக் கத்தியிருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அப்படித்தான் நடந்துகொள்கிறார்களா, கொள்வார்களா என்கிற சந்தேகத்தை எழுப்புகிறது அவர்களின் அணுகுமுறை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்த அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அவர்களுக்கு நீதி கிடைக்கும் என்று உறுதியளித்திருக்கிறார். அந்தத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றும் முற்கற்பிதங்களோடு இல்லாமல் திறந்த மனதுடன் அணுகி இந்த விசாரணைகளை நடத்தவேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தான் உத்தரவிட்டுள்ளார் என்றும் உண்மைகள் கண்டறியப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரும் சோகம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்தத் தாக்குதலில்கொல்லப்பட்டவர்களுக்கும்பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. அதிலும் இதுபோன்ற பாதிப்புக்களை அதிகம் சந்தித்தவர்கள் என்ற வகையிலும் அவர்களின் வேதனைகள், துன்பங்களைப் புரிந்துகொண்டவர்கள் என்ற வகையிலும் தமிழர்கள் எப்போதும் அவர்களுக்குத் தோளோடு தோள்நின்று ஆதரவு தெரிவிப்பார்கள். அவர்களுக்கு நீதி கிடைப்பதற்காகப் போராடுவார்கள்.

அதேசமயம், இலங்கையின் அரசுத் தலைவர் அவர்களை நாடி ஆறுதல் சொல்லுகின்ற போதும் அவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவேன் என்று உறுதளிக்கின்றபோதும் தமிழ் மக்களுக்குத் துக்கம் தொண்டையை அடைப்பதையும் மனது வலிப்பதையும் தவிர்க்க முடியவில்லை. அதற்குக் காரணம், உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்தே இதேபோல அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கும் பாதிப்புக்களுக்கும் நீதி கேட்டு தமிழ் மக்கள் நடையாய் நடந்துகொண்டிருக்கிறார்கள். ஜெனிவா சென்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவைப் படியேறி தமக்கு நீதி கேட்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்காக அரசுத் தலைவரிடமிருந்து ஒரு ஆறுதல் வார்த்தை வரவில்லை. உங்களுக்கும் நீதி வழங்குவேன் என்று ஒரு உறுதிமொழி தரப்படவில்லை.

தேர்தல் பரப்புரை மேடைகளில் அநுர ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுப் பேசினார். அது அரச படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது நிலை குறித்த பேச்சு. ”அந்த மக்கள் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்கிறார்கள். தமது கைகளால் அரச படையினரிடம் தாமே ஒப்படைத்த தமது பிள்ளைகளுக்கு, கணவர்களுக்கு, அப்பாக்களுக்கு என்ன நடந்தது என்று கேட்கிறார்கள், உண்மையைச் சொல்லும்படி கேட்கிறார்கள். நாம் அவர்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமல்லவா” என்று அவர் சிங்கள மக்களிடம் கேட்டார். அதையும் ஆமோதித்தான் சிங்கள மக்கள் அவருக்கு வாக்களித்து அரசுத் தலைவர் ஆக்கினார். ஆனால், அந்தக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிகுறித்துக்கூட அரசுத் தலைவர் இதுவரை வாய் திறக்கவில்லை. படையினரிடம் ஒப்படைத்துக் காணாமல்போனவர்களின் நிலை குறித்த எந்த விசாரணைகளுக்கும் புதிதாக உத்தரவிடப்படவில்லை. குறைந்தபட்சம்காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவினர்களைச் சந்தித்து உங்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவேன் என்ற ஆறுதல் வார்த்தைகூடக் கூறவில்லை.

அப்படியென்றால், இந்தப் போரை ஆதரித்த அரசுப் பயங்கரவாதத்தை ஏற்றுக்கொண்ட ஜேவிபியின் கொள்கையிலிருந்து தேசிய மக்கள் சக்தி இன்னும் வெளியே வரவில்லை என்பதுதானே அர்த்தம். அரச படையினருக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பது என்பது ஒப்பீட்டளவில் சிங்கள மக்களிடம் தமது ஆதரவைக் குறைக்கும் என்றும் தமிழ் மக்களுக்கான நீதி என்பது இரண்டாம் தரக் குடிமக்களுக்கான நீதி அதைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்றும் ஜேவிபி கருதுவதானே உண்மை. நீதிஎன்பதுவெறும்அரசியல்மட்டும்தான் என்பதைத்தானே இந்த அணுகுமுறை காட்டுகின்றது. ஏன் இந்தப் பாரபட்சம்.



# அநுர பிரேமதாசாவாகவும் சஜித் ரணிலாகவும் ஏன் பார்க்கப்பட்டார்கள்?

**உபுல் யோசப் பெர்னான்டோ**

“ரணசிங்க பிரேமதாச என்ற ஏழைச்சிறுவன், நகர தொழிலாளர் இயக்கத்தின் ஊடாக பிரபுத்துவத்தின் ஆதிக்க அரசியலின் உச்சத்துக்கு உயர்ந்து ஜனாதிபதியானான். அவன் கொழும்பில் ஒரு சேரிப் பகுதியில் பிறந்தான், அவனுடைய குடும்பம் இலங்கையில் ஒடுக்கப்பட்ட சாதியிலிருந்து வந்தது. கல்வியறிவு குறைவாக இருந்த இந்தியாவைப் போல இலங்கையில் சாதிய ஒடுக்குமுறை கடுமையாக இல்லை என்றாலும், அரசியலைக் கட்டுப்படுத்தும் நிலவுடமைப்பிரபுத்துவத்திற்கு பிரேமதாசா அந்நியராக இருந்தார்” என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை 1988 டிசெம்பர் 21 எழுதியது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக பதவியேற்றபோது அவரது வெற்றி குறித்த கட்டுரையிலேயே நியூயோர்க் டைம்ஸ் இவ்வாறு விவரித்திருந்தது. இப்போது சரியாக 36 வருடங்களின் பின்னர், சர்வதேச ஊடகங்கள் அனுரகுமாரவின் வெற்றியை அதேபோன்று வர்ணிக்கின்றன, ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், உயரடுக்கின் ஆதிக்கத்தில் இருந்த அரசியல் பொறிமுறையை உடைத்து ஜனாதிபதி ஆனார். சஜித் பிரேமதாசவும், அநுரவைப் போன்று, சமூகத்தின் உயரடுக்கின் கட்டுப்பாட்டில் உள்ள அரசியல் பொறிமுறைக்கு சவாலாக வெளியில் இருந்து வந்தவரே. அதனால்தானோ என்னவோ அவர் தோற்றுப்போனவர் என்று எந்த ஊடகமும் கூறவில்லை.

அப்படியிருந்தும் சஜித் ஏன் தோற்றார்? ஏனெனில் தானும் தனது தந்தை உட்பட தனது குடும்பத்தாரும் நிலப் பிரபுத்துவ அமைப்புக்கு வெளியில் இருந்து வந்தவர்கள்தான் என்று மக்களை நம்பவைக்கத் தவறிவிட்டார் சஜித்.

1988, -89 காலதத்தில் ஜே.வி.பியின் எழுச்சி இந்திய விரிவாக்க வாதத்திற்கு எதிராகத் தொடங்கப்பட்டது, ஆனால் அதன் வேர்கள் பிரபுத்துவ அமைப்பு முறைக்கும் எதிராக இருந்தன. அந்தக் காலத்தில் பிரேமதாசவே ஜே.வி.பி. எழுச்சியை எதிர்கொள்ளவதற்கான சிறந்த வேட்பாளர் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன நம்பினார், ஏனெனில் அவரது நெருங்கிய கூட்டாளிகளான லலித் மற்றும் காமினி ஆகியோர் சமூகத்தின் உயரடுக்குகளின் ஒரு பகுதியாகக் காணப்பட்டனர்.

அந்த நேரத்தில், நாடு ஒரு எளிய குடும்பத்திலிருந்து ஒரு சிறிய மனிதனைக் கோரி நின்றது, அதை ஜே.ஆர். தனது அரசியல் கணக்கீடுகளில் சரியாகப் புரிந்துகொண்டார். லலித் அல்லது காமினி வேட்பாளராக இருந்தால் திருமதி பண்டாரநாயக்கா அவருக்கு எதிராக இலகுவாக வெற்றி பெறுவார் என்று அவருக்குத் தெரியும், ஏனெனில் பண்டாரநாயக்க குடும்பம் சமூகத்தின் உயர் அடுக்கில் முக்கிய பிரமுகர்களாக இருந்தாலும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐ.தே.க.வை விட முற்போக்கான கட்சியாகக் காணப்பட்டது. முற்போக்கு வர்க்கத்தின் உயரடுக்கு தலைவரான திருமதி பண்டாரநாயக்காவைத் தோற்கடிக்க எளிய மனிதரான பிரேமதாச போன்ற ஒருவரை ஜே.ஆர். பயன்படுத்திக்கொண்டார். அவருடைய கணக்கீடுகள் சரியாக இருந்தன.

பிரேமதாச தனது ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகள் முழுவதிலும் ஒரே ஒரே முழக்கத்தையே பயன்படுத்தினார்: அவர் பிரபுத்துவ அமைப்புக்குச் சவால் விடும் ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறிய மனிதர் என்று மக்களை நம்ப வைத்தார். தன்னோடு ஒரேயொருமுறை கிராமத்தில் உள்ள மண் பாதையில் நடக்கவும், ஓடையில் குளிக்கவும், ஒரு எளிய வீட்டில் சாப்பிடவும் அவர் திருமதி பண்டாரநாயக்கவுக்குச் சவால் விடுத்தார். அப்படிச் செய்வதன் மூலம், தான் ஒரு சாதாரண மனிதன், எளிமையாக வாழப்பழகியவன் என்பதை மக்களுக்கு உணர்த்தினார்.

இத்தகைய பேச்சை சகித்துக்கொள்ள முடியாத அனுரா ஒருமுறை தனது தாயார் பிரபுத்துவ குடும்பத்தில் பிறக்கவில்லை என்று மக்களுக்கு விளக்கிக்கூறவேண்டியவரானார்

அப்போது பிரேமதாசாவை மக்கள் தங்கள் வகுப்பைச் சேர்ந்த ஒரு சிறிய மனிதராகவே பார்த்தார்கள். ‘இவருக்கு ஒரு வாய்ப்பு கொடுப்போம்’ என்று நினைத்தார்கள். ஜே.வி.பியின் எழுச்சி நாட்டை அந்த நிலைக்கு கொண்டு சென்றது. இந்த எழுச்சியானது மேல்தட்டு வர்க்க இளைஞர்களால் அல்ல, மாறாக கிராமப்புறங்களில் சாதியால் ஒடுக்கப்பட்ட சிறு குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெண்களால் தூண்டப்பட்டது. அவர்களின் குரலைக் கேட்டு, மக்கள் ஒரு சிறிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை ஜனாதிபதியாக்கினர்.

2022 அரகலயா சிறிய குடும்பங்களின் குழந்தைகளின் போராட்டமாகவும் இருந்தது. அந்தப் போராட்டக்காரர்களும் சமூகத்தின் உயரடுக்கு அரசியலாளர்களுக்கு வெளியிலிருந்து புதியவர்களைக் கோரினர். மாற்றத்தை வேண்டினர். மக்களால் வேண்டப்பட்டவர்கள் அரசியல் மேட்டுக்குடி அமைப்பால் சிதைக்கப்பட்டவர்களல்லர், மாறாக மேட்டுக்குடி அரசியலுக்கு வெளியே நின்றவர்கள், கறை படியாதவர்கள்.

அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், மேட்டுக்குடி அரசியலாளர்களுக்கு வெளியே இருந்து வருபவராக இருக்க அனுரவைவிட சஜித்தே மிகவும் பொருத்தமானவர். அநுரவின் கட்சியினர் சந்திரிகா, மகிந்த, ரணில் ஆகியோரை ஆட்சிக்குக் கொண்டு வந்து மேட்டுக்குடி அரசியல் பொறிமுறையைப் பாதுகாத்தவர்கள். ஆனால் சஜித் சந்திரிக்கா, மகிந்த, ரணில் ஆகியோருடன் அத்தகைய ஒப்பந்தங்கள் எவற்றையும் வைத்திருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் ரணிலின் உயரடுக்குத் தலைமைக்கு எதிராக கிளர்ச்சி செய்த தலைவர் அவர். அந்தக் கிளர்ச்சியை முன்னெடுத்துச்சென்றபோது, மகிந்தவும் சந்திரிகாவும் ரணிலுக்கு ஆதரவாக இருந்தனர். அநுரகுமாரகூட அப்போது ரணிலுக்கு உதவியாக இருந்தார். அந்தச் சூழ்நிலையில், சஜித்தான் மேட்டுக்குடி அரசியலின் எதிர் புரட்சியாளர். உண்மையான வெளியாள்.

அப்படியிருந்தும் சஜித் தன்னை மேட்டுக்குடி அரசியலுக்கு புறம்பான ஆளாகத் தன்னைச் சந்தைப்படுத்தவில்லை. ஏன்? இந்தக் கேள்விக்கு விடைதெரியாது. ஆனால் உண்மை என்னவென்றால், அரசியலில் ரணசிங்க பிரேமதாசவின் காலணிகளை அநுர அணிய முற்பட்டபோது, ரணிலினதும் ஜே.ஆரினதும் காலணிகளை அணிய முயன்றார் சஜித்.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அநுர பிரேமதாசாவாகவும் சஜித் ரணிலாகவும் ஏன் பார்க்கப்பட்டார்கள்?

4ம் பக்க தொடர்ச்சி...........



சோகம் என்னவென்றால், 2022 அரகலய போராட்டம், அமைப்புமுறையைமாற்றவேண்டும் என்ற விருப்பத்தின் கீழ் மேட்டுக்குடிக்கு அப்பாலான அரசியலாளர்களைக் கோருவதை சஜித்தால் உணரமுடியவில்லை. ரணில் அல்லது ஜே.ஆர். போன்ற சர்வதேச தொடர்புகளைக் கொண்ட, ஓர் உயரடுக்கு பொருளாதாரத்துக்குப் புத்துயிர் அளிக்கக்கூடிய ஒருவரை மக்கள் விரும்புகிறார்கள் என்றே சஜித் நினைத்தார். ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், அவரை எதிர்த்து சஜித் போராட முன்வந்தார், ஆனால் அவரது கட்சியின் உயர் மட்டத்தினர் இந்தப் போராட்டம் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் நலிவுபடுத்தும் என்றும், வர்த்தகர்கள் சொல்வது போன்று போராட்டங்கள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் அறிவுத்தினார்கள்.

''இனி 'அரகலயா' என்பதில் எந்த அர்த்தமும் இல்லை. இப்போது எல்லோரும் பொருளாதாரத்தைப் பற்றி பேசுகிறார்கள்'' என்று சஜித்தை அவர்கள் நம்ப வைத்தார்கள். பொருளாதாரத்தைப் பாதிக்கும் எதையும் செய்யப்போய் மக்கள் ஆதரவை இழந்துவிடாதீர்கள் என்று அறிவுரை வழங்கினார்கள்.

''ஐஎம்எப்-ஐ ஆதரிப்போம். ரணிலின் பொருளாதாரக் கொள்கையே எமது பொருளாதாரக் கொள்கை என்று மக்களை நம்ப வைப்போம்...'' என்றார்கள்.

இதனால்தான் ரணிலின் முதலாவது வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தின்போது, ஆளும்தரப்பின் பொருளாதாரப் போக்குத் திசை சரியானது என சஜித் தெரிவித்தார். ரணிலின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்ததன் மூலம் ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சி தமது கட்சிகளின் கொள்கைகளை ஏற்றுகொண்டுள்ளது என்று சஜித் தரப்பு கூறியது. அதன் மூலம் ரணிலின் கொள்கையே தனது கொள்கையும் என்று சஜித் ஏற்றுக்கொண்டார். அவரது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும்கூட இதனை ஆதரித்துக் கருத்துரைத்தனர்.

மறுபுறம், அநுரவும் ஜே.வி.பினரும், 70 ஆண்டுகளாக ஆண்டு, நாட்டை வங்குரோத்தடையச்செய்த, தோல்வியுற்ற கொள்கைகளை தொடர மாட்டோம் என்றனர். நாட்டின் ஊழல்வாதிகளால் கொள்ளையடிக்கப்பட்ட செல்வத்தை மீண்டும் கொண்டு வந்து புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம் என்றனர். உயர்சாதியினரின் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியும் அவர்களின் பிராடோ கார்கள், மெய்க்காவலர்கள், வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் பற்றிப் பேசினார்கள். ஜே.வி.பியின் எளிமையான, சிக்கனமான வாழ்க்கை முறையுடன் ஒப்பிட்டு அவர்கள் மக்களின் வரிப் பணத்தில் சொகுசு வாழ்க்கையில் மிதக்கிறார்கள் என்று மக்களை நம்ப வைத்தார்கள்.

அனுரா ஒருமுறை தான் பயன்படுத்திய ஆடைகளையே மீண்டும் மீண்டும் அணிகிறார் என்றும், ஒட்டைகள் கொண்ட ஆடைகளை அணிந்கிறார் என்றும் சொன்னார். அதன் மூலம் தானம் தொழிலாள வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்று காட்டிக்கொண்டனர். இதைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தி சிரித்தது, அனுரவும் ஜே.வி.பி. தலைவர்களும் எப்படி சர்வதேச அளவில் ஆங்கிலத்தில் பேச்சு நடத்துவார்கள் என்று கேலி செய்தது. ஆனால் மக்கள் அப்படி நினைக்கவில்லை. அவர்களை மேட்டுக்குடி அரசியலுக்கு எதிரானவர்களாக, தம்மில் ஒருவராகப் பார்த்தனர். அதனால்தான் மேட்டுக்குடி அரசியலின் உண்மையான எதிரியான சஜித் மக்களிடம் விற்பனையாகாமலம் அநுர விற்பனையானார்.

பிரேமதாச போன்ற ஒருவரை மீண்டும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்வதற்காக 2022 'அரகலய' எழுந்தது. பிரேமதாசவின் மகன் சஜித் இதற்குத் தகுதி பெற்றிருந்த போதிலும், அனுர பிரேமதாசவின் உருவத்தை அணிந்துகொண்டு அரண்மனைக்குச் சென்றார். சஜித், ரணில் மற்றும் ஜே.ஆரின் காலணிகளை அணிய முயன்று வீட்டுக்குச் சென்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பியூமி ஹன்சமாலியின் சொகுசு வாகனம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை



நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலிக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் சொகுசு வாகனம் தொடர்பில் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு விசாரணை நடத்தி வருகின்றது.

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சொகுசு வாகனம் ஒன்றை பியூமி ஹன்சமாலி கொள்வனவு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த சொகுசு வாகனத்தை கொள்வனவு செய்ய செலவிடப்பட்ட பணம் தொடர்பிலும் பியூமி ஹன்சமாலிக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பிலும் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு விசாரணை நடத்தி வருகின்றது.

இது தொடர்பான விசாரணைகளுக்காக பியூமி ஹன்சமாலி குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவில் வெள்ளிக்கிழமை முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது, நடிகையும், மொடலுமானபியூமிஹன்சமாலி சுமார் 9 மணிநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.(05)

# மும்மொழிகளிலும் 'ஏ' தர சித்தி பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி மாணவி



உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவி தரண்ஜா கோபிநாத் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்தியை பெற்றுக் கொண்டதுடன் மும்மொழியிலும் அதிவிசேட திறமைச் சித்தியை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அந்தவகையில் தமிழ் ஏ, ஆங்கிலம் ஏ, சிங்களம் (இரண்டாம் மொழி) ஏ என்ற சித்தியை பெற்றுக் கொண்டதுடன், ஆங்கில இலக்கியத்திலும் ஏ பெறுபேறு பெற்று மொத்தமாக 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

உடுவில் மகளிர் கல்லூரி 200 ஆவது அகவையைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில் இது ஒரு வரலாற்று சாதனையாக கருதப்படுகிறது.

சாதனை படைத்த மாணவிக்கு பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

(05)

# உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுடனான பேச்சுக்கள் வெற்றி

## நிதியமைச்சு அறிவிப்பு

உத்தியோகபூர்வகடன்வழங்குனர் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கொள்கை இணக்கப்பாட்டு நிபந்தனைகள் குறித்த பேச்சுவார்த்தை செயன்முறை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டுவரப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.


கடன்மறுசீரமைப்பு செயன்முறையின்போது ஆரம்பகட்டமாக எட்டப்படும் கொள்கை இணக்கப்பாடு தொடர்பானநிபந்தனைகள் அனைத்துக்கடன்வழங்குநர்களும் ஒரேவிதமாக நடத்தப்படல் என்ற கோட்பாட்டுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றனவா என்பது குறித்து உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுடனும், சர்வதேச நாணய நிதியத்துடனும் முன்னெடுக்கப்பட்டுவந்த பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டிருப்பதாக நிதியமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டிருக்கும் கொள்கை இணக்கப்பாட்டு நிபந்தனைகள் அனைத்துக் கடன்வழங்குனர்களும் ஒரேவிதமாக நடத்தப்படல் என்ற கோட்பாட்டுக்கு ஏற்புடையவையாகக் காணப்படுவதாக உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழு உறுதிப்படுத்தியிருப்பதாகவும், அதேவேளை அந்நிபந்தனைகள் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதாக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச பிணைமுறி உரித்தாளர்களுடன் கொள்கை மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி அரசாங்கம் அறிவித்தது. அதனையடுத்து கடந்த மாதம் 21 ஆம் திகதி ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்று, 25 ஆம் புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுடனான பேச்சுகள் வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டுவரப்பட்டிருப்பதுடன், இச்செயன்முறையைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய சர்வதேச நாணய நிதியம் மற்றும் உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழு உள்ளடங்கலாக சகல கடன்வழங்குனர்களுக்கும் அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.(05)

# அம்மா இலக்குமி அணைப்பாய் தாயே !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .. ஆஸ்திரேலியா**

நீள் செல்வம் நிலபுலங்கள் வேண்டாம்
மாடி மனை கோடிசெல்வம் வேண்டாம்
ஆழ் மனதில் அமைதிவர எனக்கு
அருள் தருவாய் இலக்குமித் தாயே

வையத்துள் வறுமை இன்றி வாழ
மற்றவர்க்கு மனம் விரும்பி ஈய
பொய் இல்லா வழியினிலே உழைக்க
உய்யும் வழி காட்டிடுவாய் தாயே

இல்லை என்று சொல்லாமல் இருந்து
இல் அறத்தை நல்லறமாய் ஆக்க
நல்ல பாதை காட்டிடுவாய் தாயே
நா நிலத்தில் துணையாவாய் நீயே

அளவற்ற ஆசை எனக் கில்லை
அளவான பொருள் இருந்தால் போதும்
நிலையற்ற தங்கம் வைரம் வேண்டாம்
நினதருளே எனக் கிருந்தால் போதும்

செல்லும் செல்வம் வேண்டாம் தாயே
செல்லா அருளைத் தந்திடு தாயே
அல்லும் பகலும் உந்தன் நினைப்பே
அம்மா இலக்குமி அணைப்பாய் தாயே

# சிறையிலுள்ள கணவனுக்கு தேங்காய் சம்பலில் போதைப்பொருளை கலந்துசென்ற மனைவி

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவனுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப் பொருள் கலந்த உணவைகொண்டுசென்ற பெண்ணொருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், சுச்சாரித்தாகம பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவரைப் பார்ப்பதற்காக பெண்ணொருவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், இந்த பெண் கொண்டு சென்ற உணவுப் பொதியில் இருந்த தேங்காய் சம்பலில் போதைப்பொருள் கலந்திருப்பதை கண்டுப்பிடித்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவு தொடக்கம்





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவு கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் குருபரன் இந்தத் தொகுதியைத் திறந்துவைத்ததுடன், அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சுழற்சி அடிப்படையில் வருகைதந்து இருதய சிகிச்சை நோயாளர்களை பார்வையிடுவார்;.

எக்கோஎடுக்கும் இயந்திரமும் செயற்படத்தொடங்கியுள்ளது. இந்த இயந்திரத்தை சுகாதாரத் திணைக்களம் வழங்கி வைக்க, அதற்குரிய புறோப் கருவியை அளவெட்டியை பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினவேல் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியில் வழங்கிவைத்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை வலிகாமத்தின் முழுப்பகுதி மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.(05)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பொதுப்பட்டமளிப்பு

## சனி, ஞாயிறு தினங்களில நிறைவு









கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான 28 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா சனிக்கிழமை மற்றும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களின் ஒருங்கிணைப்பில்



நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றுவருகின்றது.

இந் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குவதுடன் பட்டதாரிகளின் பட்டங்களையும் உறுதிசெய்தார்.

இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் (யாழ்ப்பாணம்) ஸ்ரீ சாய் முரளி இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டுள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக அதிகூடிய எண்ணிகையிலான மாணவர்கள் இம்முறை பட்டம் பெற்றுள்ளனர்.

ஏறத்தாழ 2340 உள்வாரி, வெளிவாரி, கலாநிதி மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டங்கள் இம்முறை பொது பட்டமளிப்பு விழாவில் பட்டம் வழங்க உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி வ.கனகசிங்கம் தெரிவித்தார்.

பிரதி உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரீ.பிரபாகரன் உட்பட பலர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

பட்டமளிப்பு விழாவின் முதலாம் நாளில் முதலாவது அமர்வின் போது இரு கலாநிதிப்பட்டம், ஒரு முதுதத்துவமாணி இரு விஞ்ஞான கல்வியில் முதுமாணி, ஒரு விவசாய விஞ்ஞானத்தில் முதுமாணி, 58 கல்வியியல் முதுமாணி, 04 கலை முதுமாணி, 05 வியாபார நிர்வாக முதுமாணி, 31 அபிவிருத்தி பொருளியல் முதுமாணி மற்றும் 153 இளங்கலைமாணி பட்டங்கள் (வைத்தியமாணி,சத்திரசிகிச்சைமாணி, சிறப்பு தாதியியல் விஞ்ஞானமாணி, தாதியியல் விஞ்ஞானமாணி, சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி, விவசாய விஞ்ஞானமாணி) போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிக நிர்வாகமாணி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிகவியல்மாணி, வணிகவியல்மாணி, கணக்கீடு மற்றும் நிதியியல் சிறப்பு வணிகவியல் மாணி, வணிக பொருளியல் சிறப்பு வணிகவியல் மாணி, விஞ்ஞானமாணி, சிறப்பு விஞ்ஞானமாணி எனும் வகையில் 333 பட்டங்களும், சித்தமருத்துவம் - சத்திர சிகிச்சை இளமாணி, சிறப்பு விஞ்ஞானமாணி, கணிணி விஞ்ஞானமாணி விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி, தொடர்பாடல் கற்கைகளில் கலைமாணி, மொழியியல் கலைமாணி, எனும் வகையில் 424 பட்டங்களும், மற்றும் நுண்கலைமாணி - இசை, நுண்கலைமாணி - நடனம், நுண்கலைமாணி - நாடகமும் அரங்கியலும், நுண்கலைமாணி - கட்புலமும் தொழிநுட்பவியல் கலையும் எனும் வகையில் 204 பட்டங்களும் முதலாம் நாளில் 2 ஆவது 3 ஆவது, 4 ஆவது அமர்வுகளில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கல்விமாணி மற்றும் கலைமாணி (விசேட பட்டம்) எனும் வகையில் 321 பட்டங்களும் கலைமாணி (பொதுப்பட்டம்) எனும் வகையில் 740 பட்டங்களும் வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) எனும் வகையில் 61 பட்டங்களும் 2 ஆம் நாளின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அமர்வுகளில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (05)



## பாதிக்கப்பட்டோருக்கு ....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களுடன் பேசிய ஜனாதிபதி, 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இந்த நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய அவலமானது காலத்தின் மணலில் புதைந்திருந்தாலும் அதனை துடைத்தழிக்க இடமளிக்க மாட்டோம் என்று வலியுறுத்தினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நீதி மற்றும் நீதிக்கான எதிர்பார்ப்பும் இருந்ததாக தாம் நம்புகிறார் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

நாட்டு மக்களின் இலக்கு, எதிர்பார்ப்பு, நம்பிக்கை என்பனவும் தனது இலக்கு, எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கை ஒன்றே எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் நீதி மற்றும் நியாயத்தை நிறைவேற்றுவதே தமது எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்தார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, விசாரணைகளைத் தான் ஏற்கனவே தொடங்கிவிட்டார் என்றும் தெரிவித்தார்.

முன்கூட்டிய முடிவுக்கு வந்து சாட்சியங்களைத் திரட்டி விசாரணையை மேற்கொள்ளக் கூடாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்தச் சம்பவம் தொடர்பில் திறந்த மனத்துடனும் தெளிவான விசாரணையை நடத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்புச் செயலாளருக்கு பணிப்புரை விடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றத்துக்காகவே இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்ட-து என்ற அபிப்பிராயம் சமூகத்தில் நிலவுவதாகவும், அரசியல் நோக்கத்திற்காக நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுமானால் அது பெரும் சோகமாகும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இத்தாக்குதலில் அன்றைய அரச இயந்திரமும் ஈடுபட்டதாக சமூகத்தில் சந்தேகம் எழுந்துள்ளது. அவ்வாறானதொரு நிலை இருந்திருந்தால் எமது நாடு எப்பொழுதும் பாதுகாப்பற்ற மற்றும் மிகவும் ஆபத்தான நிலைமையில்தான் இருக்கும். அதற்காகவே இங்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

ஏறக்குறைய 274 பேரின் உயிரைப் பலிவாங்கிய மற்றும் பலரைக் காயப்படுத்திய இந்த அவலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் - என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிடைக்கவில்லை என இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் ஆட்சியாளர்கள் உதவிய போதிலும் இந்தத் தாக்குதலுக்கான காரணம் என்ன என்ற கேள்வி இன்னும் மக்களிடம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அநுரகுமார திசநாயக்க மீது இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதாகவும், அவரது நேர்மையை தாம் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தனித்தும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும் என்று அதன் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். தமது கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களைச்சேர்த்துஉருவாக்கப்படும் கூட்டணியிலும், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்குஆதரவளித்தவர்கள்இடம்பெறும் கூட்டணியிலும் தாம் சேரப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நேற்று மன்னார், மாந்தை பிரதேசத்தில் இடம்பெற்றது. கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரிஷாத் பதியுதீன் இதனைத் தெரிவித்தார்.

கிண்ணியாவைச் சேர்ந்த கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து விலகிவிட்டார் என அறிவித்துள்ளார். இவ்வாறு பலர் உங்களது கட்சியிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணம் என்ன? உங்கள் கட்சி தனித்தா அல்லது இணைந்தா போட்டியிடும்? எனக்கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த தலைவர் ரிஷாத் தெரிவித்ததாவது:

தவறு செய்தமைக்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சிலர், இன்று தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறினர் என்று கூறித்திரிகின்றனர். தவறு செய்தவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்வாறு தவறு செய்த மூன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை எமது கட்சி நீக்கியது.

இதுபோலவே, கிண்ணியாவைச் சேர்ந்த ஒருவரையும் நாம் நீக்கியுள்ளோம். அவர் ரணிலுடன் இணைந்துள்ளார். மட்டுமல்ல கட்சியிலிருந்து தானே வெளியேறினார் என்று அவர் ஊடகங்களுக்கு கூறுகிறார். மக்கள் ஆணையை மீறியவர்களுக்கு மக்களே பாடம் புகட்டுவர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கட்சி அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும். சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச்சேர்த்துஉருவாக்கப்படும் கூட்டணியில் நாம் சேரமாட்டோம்.

இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்து, ஜனாஸாக்களை எரிப்பதற்கு உதவியவர்கள் உள்ள கூட்டணியிலும் எமது கட்சி இணையாது. அம்பாறை மாவட்டத்தில், இவ்விடயம்தான் இழுபறியில் உள்ளது. இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள அணியிலும் நாம் இணையப்போவதில்லை. இவர்களையும் சேர்த்தால் அம்பாறையில் தனித்தே மயில் சின்னத்தில் போட்டியிடுவோம். புத்தளம் மாவட்டத்திலும் இந்த நியதியே பின்பற்றப்படும். இது குறித்து தீர்க்கமான முடிவை எடுக்குமாறு கட்சியின் புத்தளம் மாவட்ட உயர்பீடத்துக்கு அறிவித்துள்ளோம் என்று தெரிவித்தார்.

## சிறி ரெலோ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் புரட்சியை தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.

கடந்த காலங்களில் தாம் தெரிவுசெய்த உறுப்பினர்களால் ஏமாந்த நிலையில் அவர்களைப் புறக்கணித்து புதிய துடிப்புள்ளவர்களை இம்முறை நாடாளுமன்றம் அனுப்புவதற்கு தமிழ் மக்களும் தயாராகி வருகின்றார்கள். அந்த மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறைமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறி ரெலோ கட்சி ஜனநாயக தேசிய கூட்டனி கட்சியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது.

(100)

## வடக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வாக்களிக்க வேண்டியிருந்தமையால் நாம் அரசியலில் தீவிரமாக ஈடுபடவில்லை. இன்று தமிழ்த் தேசியம் சீரழிந்து சிதறடிக்கப்பட்டு மக்கள் கலங்கிய குளத்தில் நீந்துகின்ற மீன்களாக உள்ளனர்.

பல்வேறு சக்திகளாலும் எமது மக்களின் வாக்குகள் கவரப்படுகின்ற பரிதாப நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் அனைவரும் ஒரே அணியாக திரண்டு ஈரோஸ் அமைப்பினூடாக போட்டியிடும் பிரதிநிதிகளை தெரிவு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

(100)

## ஈபிடிபியின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின்சன் டிபோல் அருள்நாதன், சின்னத்துரை கலாநிதி ஆகியோரும் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஞானப்பிரகாசம் மரியசீலன், முருகேசு கதிர்காமநாதன், இந்திரகுமாரன் செல்வம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(100)

## தேசியப் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பன இணைந்து ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டனியில் போட்டியிடுகின்றன.

கட்சியில் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவனேசன் (பவான்), ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் துளசி, கரைத்துறைப்பற்று பிரதேச சபை முன்னாள் தவிசாளர் க.விஜிந்தன், முருங்கன் பகுதி வர்த்தகர் அ.றொஜன், முன்னாள் போராளியான க.ஜசோதினி ஆகியோரது பெயர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ரெலோ மற்றும் புளொட் சார்பாக மேலும் ஒவ்வொருவர் நியமிக்கபடவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் புளொட் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோரும் ஈபிஆர்எல்எவ் சார்பில் சுரேஸ்பிரேமச்சந்திரன், ஆயுர்வேத மருத்துவர், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஜனார்த்தனன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அதன் தலைவர் வேந்தன், ரெலோ சார்பில் அதன் பேச்சாளர் சுரேன் குருசாமி ஆகியோரின் பெயர்கள் இறுதிசெய்யப்பட்டுள்ளன. ரெலோவிற்கு வழங்கப்பட்ட 2ஆவது இடத்திற்கு அந்தக் கட்சி எவரது பெயரையும் பரிந்துரைக்கவில்லை. அதனால் வேறு கட்சி சார்பில் வேட்பாளர் இருந்தால் நியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(100)

## ரணிலின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கு முன்னர் கூறியதை தேசிய மக்கள் சக்தி தற்போது செயற்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நீர்கொழும்பு வெல்லவீதிய காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் அவரது பொருளாதாரக் குழு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் திருத்தி அமைப்போம் என்று தேர்தலுக்கு முன் தேசிய மக்கள் சக்தியினர் கூறிவந்தனர். அந்த ஒப்பந்தம் நாட்டுக்குப் பயன்படாது என்றும் கூறினர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவ்வொப்பந்தம் நாட்டு மக்களுக்கு நல்லதல்ல என்றும் தாம் ஆட்சிக்கு வந்ததும் அதனை நீக்குவோம் என்றும் குறிப்பிட்டனர். இவ்வாறு அவர்கள் தேர்தலுக்கு முன்னர் கூறிய விடயங்களைச் செய்யாமலிருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பொருளாதார வேலைத்திட்டத்தில் ஒரு எழுத்தைக்கூட மாற்ற முடியாது என்பதை நாம் அறிந்திருந்தோம். அதனை இன்று ஜே.வி.பி. ஏற்றுக் கொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்கள் ஒரு வாரத்தில் முன்னெடுக்கப்பட்டவையல்ல. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வரும் வெற்றிகரமான திட்டமாகும். மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் மற்றும் பொருளாதாரக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நீண்ட வேலைத்திட்டமாகும்.

மத்திய வங்கியின் ஆளுநரும், திறைசேரி செயலாளரும் பொருளாதாரத்தை வீழ்த்துபவர்கள் என விமர்சித்தனர். ஆனால் அவர்கள்தான் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான ஆளும்தரப்புக்கு உதவிக்கொண்டிருக்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி ரணில் முன்னெடுத்த திட்டத்தைக் கைவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என்பதை ஆளும் தரப்பு இப்போது நன்றாக உணர்ந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக இந்த விடயங்கள் மூடி மறைக்கப்பட்டாலும், தேர்தலுக்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியம் ஏராளமான சீர்திருத்தங்களை முன்மொழியும்.

நாம் கடந்த ஒன்றரை ஆண்டுகள், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் இணைந்து பணியாற்றிய போது ஜே.வி.பி. ஒரு நாள் கூட ஒத்துழைக்கவில்லை. எப்போதும் எதிராகவே செயற்பட்டனர். எவ்வாறிருப்பினும் இந்த ஆளும்தரப்பு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல், வர்த்தகப் பற்றாக்குறையைத் தீர்ப்பது, அரச பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு போன்றவற்றை முன்னெடுப்பது அவசியமாகும். மார்ச் மாதத்திற்குப் பின் வழங்கிய வாக்குறுதிகளை இவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

## சார்ள்ஸ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் தெரிவித்தார். இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கின்றேன் என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன் மீண்டும் போட்டியிடவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. உண்மையில் அவர் போட்டியிடுகின்றாரா எனச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், "முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இம்முறை போட்டியிடவில்லை எனத் தெரிவித்திருந்தார். தற்போது போட்டியிடப்போகிறார் என்று செய்திவந்ததாகக் கூறுகின்றீர்கள். அவ்வாறு எமக்குத் தெரியாது. ஆனால் அவர் போட்டியிடுவதற்கு எமது கட்சியில் விண்ணப்பிக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நாவில் இலங்கை குறித்த தீர்மானத்தை காலநீடிப்பு செய்வதற்கு ஆதரவளியுங்கள்

## புதிய அரசிடம் 25 சிவில் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தல்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் உள்ளடங்கலாக ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக நாட்டில் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் புதிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என 25 சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், சட்டம் மற்றும் சமூக நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, இனக்கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் உள்ளிட்ட 25 அமைப்புகள் ஒன்றிணைந்து வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

நாட்டில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித்தேர்தல் முடிவுகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் நியமனத்தை இலங்கையின் அரசியல் மாற்றத்தின் மிகமுக்கிய மைல்கல்லாகக் கருதுகிறோம். தேர்தலும், ஆட்சி மாற்றமும் அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

நாடுஇப்போதுநாடாளுமன்றத்தேர்தலுக்குத் தயாராகி வருகிறது. நாட்டை ஜனநாயகப் பாதையில் கொண்டுசெல்வதாகவும், ஊழலை இல்லாதொழிப்பதாகவும், தனக்கு வாக்களிக்காதோர் உள்ளடங்கலாக நாட்டின் பிரஜைகள் சகலருக்கும் ஜனாதிபதியாக செயற்படுவதாகவும் அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுயளித்திருந்தார். அதுமாத்திரமன்றி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் 'அரகலய' போராட்டத்தின் ஊடாக மக்களால் வலியுறுத்தப்பட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது. ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தும் என நம்புகிறோம்.

அதேவேளை அனைவருக்குமான நீதியை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, அதிகாரப்பகிர்வை வழங்கக்கூடிய புதிய அரசமைப்பை உருவாக்கல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சகல இனங்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல், பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் இராணுவத்துக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வெளியிடப்பட்டுவரும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்தல், போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் ஆகிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என அக்கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

## புத்தளம் - சிலாபம் வீதியில் விபத்து ; ஒருவர் படுகாயம்

புத்தளம் - சிலாபம் வீதியில் கிரியன்கல்லி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிள் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(05)

## தேர்தல்கள் ஆணைக்குழு அரசுக்கு விதித்த தடை

புதிய அரசாங்கத்தால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு புதிய முகாமைத்துவ பணிப்பாளர் ஒருவரை சட்டவிரோதமாக நியமிப்பதை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளர் பிரபாத் மாளவிகேயின் பதவிக்காலம் ஏறக்குறைய பத்து வருடங்கள் எஞ்சியுள்ள போதிலும், புதிய துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு அவரை மாற்ற முயற்சித்துள்ளது.

இந்த விவகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், ஆணைக்குழு அமைச்சக செயலாளருக்கு கடிதம் மூலம், இது தொடர்பாக அறிக்கை கேட்டு, புதிய நியமனத்தை நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரை மீண்டும் பணியில் அமர்த்துவது மட்டுமின்றி, நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரையில் இதுபோன்ற மாற்றங்களைச் செய்ய வேண்டாம் என்றும் அமைச்சக செயலாளருக்கு தேர்தல் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

மேலும், தேர்தல் காலத்தில் குறிப்பிடத்தக்க நிர்வாக மாற்றங்களைத் தடைசெய்யும் தேர்தல் சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.(05)



# குச்சவெளியில் மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் எனக்கூறும் பௌத்த பிக்கு

## நீதிமன்ற உத்தரவின் பின்னரும் பயிர்ச்செய்கைக்கு இடையூறு



திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் என பிக்கு ஒருவர் கூறி வருவதால் அப்பகுதி மக்கள் பாரிய இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியிலாவது இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை திரியாய்க் கிராமத்தின் பூர்விக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல் மற்றும் வேடன்குளம் என உள்ளடக்கிய வயல் வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்குவால் அடாவடியாக கையகப்படுத்தப்பட்ட 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக்காணியில் விவசாயம் மேற்கொள்ள பாரிய சிரமத்தை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

வருடா வருடம் பெரும் போக வயற்செய்கையின் போதும் இவ்விதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதும் பின் பிக்குவின் அடாவடியால் பயந்து இருப்பதுமான அவல நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

நீதிமன்றால் மக்களிடம் காணிகளை கையப்படுத்தக்கோரியும் பிக்கு அடாவடியான முறையில் இச்செய்யற்பாட்டை முன் எடுப்பது குறிப்பிடத்தக்கது.(05)

# வெலிகந்தையில் மாடுகள் திருட்டு : சந்தேகநபர் துப்பாக்கியுடன் கைது

வெலிகந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேனபுர பிரதேசத்தில் மூன்று மாடுகளை திருடிய குற்றத்திற்காக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் துப்பாக்கிகளுடன் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலிகந்த சேனபுர பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து, சந்தேக நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி 1, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி 1 மற்றும் 01 கிராம் கஞ்சா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# 14 வயது சிறுமிகள் இருவர் பாலியல் துஷ்பிரயோகம்

## பேருந்து சாரதி, நடத்துனர் கைது

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லவிருந்த இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பஸ் நடத்துனர் மற்றும் சாரதி ஆகியோர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பெற்றோர்களின் தொல்லை தாங்கமுடியாத 14 வயதுடைய இரு சிறுமிகள் கொழும்புக்குச் செல்வதற்காக கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை காலை பாடசாலை செல்வதாக வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

இவர்கள் பஸ்ஸில் மட்டக்களப்பு நகருக்கு சென்று பாடசாலை உடைகளை மாற்றிவிட்டு கொழும்புக்குச் செல்வதற்காக பஸ்தரிப்பிடத்தில் காத்திருந் துள்ளனர்.

இதன்போது, இவர்கள் அக்கரைப்பற்றிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றில் ஏறி ஓட்டுமாவடி செல்வதற்கு பஸ் பயணச்சீட்டைப் பெற்றுள்ளனர்.

பின்னர், இந்த இருவரும் ஓட்டுமாவடியில் இறங்காமல் பஸ்ஸிலேயே உறங்கியுள்ளனர்.

இதனையடுத்து, பஸ் சாரதியும் நடத்துனரும் உறங்கிக்கொண்டிருந்த இரு சிறுமிகளையும் எழுப்பிவிட்டு ஓட்டுமாவடியை கடந்துவிட்டதாக கூறியுள்ளனர்.

சிறுமிகள் தாங்கள் கொழும்புக்கு செல்லவிருப்பதாக பஸ் சாரதி மற்றும் நடத்துநரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, பஸ் சாரதியும் நடத்துனரும் சிறுமிகளை கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் ஏற்றி விடுவதாகக் கூறி திருகோணமலையில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்துச் சென்று இரு நாள்கள் அடைத்துவைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

பஸ் சாரதியும் நடத்துனரும் சிறுமிகளை திருகோணமலையிலிருந்து அழைத்துச்சென்று வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு காத்தான்குடி பகுதியில் விட்டுவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதனையடுத்து , பாதிக்கப்பட்ட இரு சிறுமிகளும் தங்களது வீடுகளுக்கு திரும்பி சென்று நடந்த சம்பவம் தொடர்பில் தங்களது பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், திருகோணமலை மற்றும் கல்முனை நாற்பட்டிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 35 மற்றும் 27 வயதுடைய பஸ் நடத்துநரும் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு சிறுமிகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து , சந்தேக நபர்கள் இருவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2024இல் வெளியிடப்பெற்றது